பக்கங்கள் 17 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 31 வியாழக்கிழமை 13.06.2024 அதிர்வு 318

## கிளிநொச்சியில் குளவி கொட்டி 20 மாணவர்கள் வைத்தியசாலையில்

கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியில் இன்று குளவிக் கொட்டுக்கு இலக்கான 20 மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக காற்று வீசி வரும் நிலையில், குளவிக்கூட்டிலிருந்த குளவி 04




# ரணிலுடன் ஒருபோதும் இணையவே மாட்டோம்

## யாழில் சஜித் திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எந்த விதப் பேச்சுகளும் இல்லை. அவரோடு இணையப்போவதும் இல்லை. நாட்டை அதாள பாதாளத்தில் தள்ளிய ராஜபக்ஷ தரப்புடன் இருப்பவர்களுடன் ஒருபோதும் இணையப்போவதில்லை.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 04



# இலங்கையில் மேலும் 5 ஆண்டுகளுக்கு ரணில் ஆள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையே!



## இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவை என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படக்கூடும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக பிறிதொரு வேட்பாளரை ஆதரிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்தால் தங்களின் முடிவு எவ்வாறு அமையும் என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய 04



# ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது தாக்குதல்; வாகனங்களுக்கும் தீ வைப்பு

## அச்சுவேலியில் அதிகாலை வன்முறைக் கும்பல் வெறியாட்டம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் - அச்சுவேலியில் உள்ள ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்கள் புகுந்து உடைமைகளுக்குத் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இன்று அதிகாலை 12.15 மணியளவில் அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பலே இந்த வன்முறையில் ஈடுபட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இதன்போது வீட்டுக்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோ உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆயுதங்களால் தாக்கப்பட்டுள்ளதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டுள்ளது.

"திருநங்கைளின் உணர்வுகளைத் தவறாக சித்தரிக்காதே" என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் போடப்பட்டுள்ளன.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.














# வடக்கில் 70 சதவீத வாக்குகள் சஜித்துக்கே!

## உறுதியாகக் கூறுகிறார் திஸ்ஸ

வடக்கில் உள்ள வாக்குகளில் 70 சதவீதம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கப்பெறும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு பிரதான கட்சியுடனும் கூட்டணி அமைக்கவில்லை.



ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் உள்ள வாக்குகளும் தீர்மானமிக்கதாக அமையும். வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு சிறந்த நல்லுறவு உள்ளது. வடக்கில் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் சஜித்துக்குச் சார்பான நிலைப்பாட்டில் உள்ளனர்.

குறிப்பாக வடக்கில் உள்ள வாக்குகளில் 70 முதல் 75 சதவீத வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்திக்கே கிடைக்கப்பெறும்.

முன்னர்தான் வடக்கில் கட்டளையின் பிரகாரமும், அழுத்தங்களின் பிரகாரமும் வாக்களிக்கப்படும். தற்போது அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. வடக்கு அரசியல் களமும் மாற்றம் கண்டுள்ளது." - என்றார்.

# கடத்திச் செல்லப்பட்டு பாதாள அறையில் அடைக்கப்பட்டிருந்த 14 வயது சிறுமி மீட்பு!





பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு பாதாள அறை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 வயது சிறுமியை புத்தல பொலிஸார் பாதுகாப்பாக மீட்டனர்.

அந்தச் சிறுமியை அவரது காதலன் என்று கூறப்படும் 20 வயது இளைஞர் கடத்திச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

புத்தல கட்டுகஹகல்கே பகுதியிலுள்ள வீடொன்றுக்கு வந்த மூன்று இளைஞர்கள், அங்கு உறங்கிக் கொண்டிருந்த 14 வயது சிறுமியைக் கடந்த 9 ஆம் திகதி இரவு கடத்திச் சென்றனர்.

கடத்தலைத் தடுக்க முயன்ற சிறுமியின் தந்தையின் கையை இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், சிறுமியின் தந்தை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆனாலும், கடத்தப்பட்ட சிறுமியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிருந்தது.

எவ்வாறாயினும், நீண்ட விசாரணையின் போது, பிரதான சந்தேகநபருடன் சிறுமியைக் கடத்த வந்த மற்ற இரு இளைஞர்களையும் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடிந்தது.

அதன்படி, இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதில், கடத்தப்பட்ட சிறுமியை புத்தல புறநகர் பகுதியில் உள்ள பிரதான சந்தேகநபரின் மாமாவின் வீட்டின் பாதாள அறை ஒன்றில் அடைத்து வைத்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த சிறுமியை மீட்டனர்.

சிறுமியை அடைத்து வைப்பதற்காகக் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே இந்த அறை தயார் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஐந்து அடி உயரமும், ஆறு அடி அகலமும் கொண்ட இந்த அறை, காற்றோட்டத்துக்காக இரண்டு சிறிய துளைகள் மட்டுமே இருந்துள்ளன. மேலும், வீட்டின் உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுமி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மீட்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் கைது

யாழ். வடமராட்சி கிழக்கு, கட்டைக் காட்டில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் 8 படகுக ளுடன் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற்பகுதியில் சட்டவிரோத தொழில்க ளான அட்டை பிடித்தல், ஒளிப்பாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளதால் சிறு தொழி லாளிகள் தொடர் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர்.

கட்டைக்காட்டில் இருந்து நேற்று ஐம்பதுக்கும் அதிகமான படகுகளில் சென்று ஒளிபாய்ச்சி மீன்பிடித்து பல் லாயிரக்கணக்கான மீன்களோடு கரைக்கு வந்து கொண்டிருந்த வேளை 8 படகுகளுடன் குறித்த 16 பேரும் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப் பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கைது செய் யப்பட்ட சிலரை கடற்படை கடலில் வைத்து விடுவித்துள்ளனர் என்று நேரில் பார்த்த தொழிலாளர்கள் குற்றஞ்சாட் டியதுடன் விடுதலை செய்யப்பட்டவர்கள் துணிவாக இன்றும் சட்டவிரோத மீன்பிடிக்குச் சென்றுள்ளனர் எனவும், அவர்கள் இலஞ்சம் கொடுத்து தொழில் புரிகின்றனர் என்றும் தெரிவித்த னர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கிளிநொச்சியில்...

கள் கலைந்து வந்து மாணவர்களைத் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாண வர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின் றனர்.

### இலங்கையில்...

தேசியக் கட்சியினதோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியி னதோ வேட்பாளராக வரமாட்டார். மக்கள் வேட்பாளராகவே களமிறங்குவார். கட்சி ரீதியாகப் பிளவுபட்டு தேர்தலை எதிர் கொள்ளும் நிலையில் இன்று நாடு இல்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக் கிய மக்கள் சக்தியிடம் நாட்டை மீட்பதற் குரிய வேலைத்திட்டம் இல்லை. தேசிய மக்கள் சக்தியிடமும் இல்லை.

எனவே, ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டை அழிவு திசையை நோக்கிக் கொண்டு செல்லும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுக்காது என நம்புகின்றேன். இந்த நாட்டை மேலும் ஐந்தாண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆள வேண்டும்.

இந்த அரசில் உள்ள பங்காளிக் கட்சி கள் தமது அடையாளத்தையும் பாது காத்துக்கொண்டே செயற்படுகின்றன. ஜனாதிபதி அதற்கு ஒருபோதும் இடையூறு ஏற்படுத்தியது கிடையாது. எனவே, ரணில் தான் அடுத்த ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது நிலைப் பாடாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக் குள் உள்ள பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற முடிவிலேயே உள்ளனர்." – என்றார்.

### ரணிலுடன்...

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின்போது, 'ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவும் நீங்களும் இணைந்துகொள்ளப் போவதாகக் கூறப்படும் கருத்துக்களில் உண்மை இருக்கின்றதா?' – என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே சஜித் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் இங்கு வந்து பல்வேறு உதவி களை வழங்கி வருகின்றேன். இதனை நாட்டின் அனைத்து இடங்களிலுமே முன்னெடுத்து வருகின்றேன். நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் எமது மக்க ளுக்கானை தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றேன்.

பாடசாலைகளுக்கு, வைத்தியசாலை களுக்கு என உதவிகளைச் செய்வது தேர் தலுக்காக அல்ல. அது எனது நீண்ட நாள் திட்டம். இதற்கமையவே நீண்ட கால மாக அனைத்து இடங்களிலும் இதனை ஒரு பணியாகச் செய்து வருகின்றேன்.

நான் இங்கு வந்து மைதானத்தில் கதைத்த ஒரு விடயத்தைச் சிலர் சர்ச்சை யாக்கியுள்ளனர். அதனை வைத்து எனக்கு எதிரான பிரசாரங்களை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக நல்லாட்சி காலத்தில் மண் டைதீவில் சர்வதேச கிரிக்கெட் விளை யாட்டு மைதானத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்தன. அதன் நினை வில்தான் மைதானம் தொடர்பாக இளை ஞர்களிடம் வினவினேன். ஆனால், மண் டைதீவு என நினைவு வரவில்லை.

இதனால் மண்டைதீவில் கிரிக்கெட் மைதானம் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து இருக்கின்றோம். ஆகவே, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முதற்கட்டமாக இந்த மைதானத்தை அமைப்போம்.

இப்போது நாட்டின் அரசியல் வேறு வியூகத்தில் செல்கின்றன. அதிலும் ஜனாதிபதி ரணிலுடையடைய செயற்பாடு ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தி நடக்கின்றதேயொழிய சாதாரண மக்க ளுக்கானது அல்ல.

நாட்டை அதாள பாதாளத்தில் தள்ளிய ராஜபக்ஷ தரப்புடன் இணைந்து செயற் படும் நபர்களுடன்

ஒரு நாளும் நான் இணைந்து செயற் படப்போவதில்லை. அவ்வாறானவர்க ளுடன் எந்தவித பேச்சுகளும் இல்லை.

நான் இப்போது புதிய அரசியல் நட வடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற அதே வேளை புதிய அரசியல் பிறாண்டாக எனதுபணத்தைஆரம்பித்திருக்கின்றேன். இதற்கு அனைவரும் ஆதரவை வழங்க வேண்டும்." – என்றார்.



# கட்சிகளுடன் இணைந்து செயற்படுகையில் இறுக்கமான போக்கில் ஐக்கிய மக்கள் சக்தி!

## செயற்படும் என்கிறார் கல்முனை அமைப்பாளர் றஸ்ஸாக்

**(கே. எ. ஹமீட், நூருல் ஹுதா உமர், எம் எப். நவாஸ்)**

ஐக்கிய மக்கள் சக்தி, கடந்த காலங்களில் தனது அரசியல் நீரோட்டத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதால் பல்வேறு பாடங்களை கற்றுள்ளது. எனவே எதிர்காலத்தில் கடந்த காலங்களில் விட்ட தவறுகளை விடாது என்றும் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். றஸ்ஸாக் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி கல்முனை தொகுதி நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அலுவலகத்தில் இடம்பெற்றது இந்த நிகழ்வுக்குத் தலைமை தங்கி உரையாற்றும்போதே அமைப்பாளர் றஸ்ஸாக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்குக் கௌரவ அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.எச். எம். அல் இஹ்ஷான் கலந்து கொண்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய சட்டத்தரணி எம்.எஸ். றஸ்ஸாக்,

தற்போதைய சூழலில் கூறப்படும் கருத்துக் கணிப்புக்கு அமைவாக ஐக்கிய மக்கள் சக்தி 54 வீதத்துக்கு மேலான ஆதரவைப் பெற்று முன்னிலை வகிக்கின்றது. இவ்வாறான நிலையில், நமது கட்சியைப் பலவீனப்படுத்த பல்வேறு சக்திகள் முனைகின்றன. இருந்தபோதும் நாட்டு மக்கள் தெளிவான நிலையில் இருக்கின்றனர். கட்சியின் முக்கிய பதவிகளில் இருப்பவர்களான நாங்கள் மிகுந்த அவதானத்துடன் நமது பணிகளை முன்னெடுக்க வேண்டும். கட்சி மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும் சேறுபூச முனைபவர்களுக்கு தகுந்த விளக்கங்களை கொடுக்க வேண்டும்.

சில உள்ளூர் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாகக் கட்சி அடைந்த பின்னடைவுகளை தலைமையிடமும் சம்மந்தப்பட்டவர்களிடமும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அவற்றை அவர்கள் எற்றுக் கொண்டுள்ளர்கள். கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளை எதிர்காலத்தில் கட்சி விடாது என தலைமை எங்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளது. பிரதேச அபிவிருத்தி மற்றும் கட்சியில் கௌரவம் போன்றவற்றை உரிமையுடன் அனுபவிக்க வேண்டுமானால் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற தேசிய கட்சிகளுடன் இணைந்திருப்பதன் ஊடாகவே பெற முடியும்.– என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கட்சியின் கல்முனைத் தொகுதி இணைப்பாளர் ஆமீதுலெப்பை அப்துல் கபூர்,

கட்சியின் தலைமைக்கு துரோகம் செய்தவர்களுடன் மீண்டும் ஓர் இணைப்பை ஏற்படுத்த சிலர் முயச்சிக்கின்றனர். சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது என்ற முதியோர் வாக்குக்கு அமைய அவர்களது எண்ணம் நிறைவேறாது.

அமைச்சர்கள் ஆண்ட கல்முனை தொகுதி தற்போது சோபையிழந்து காணப்படுகிறது. கல்முனைக்கு உரிய அமைச்சுப் பதவியை ஹக்கீமும் றிஷாத்தும் பறித்துச் செல்கின்றனர். இவ்வாறானதொரு நிலைக்கு எதிராக நாங்கள் கிளர்ந்தெழ வேண்டும்.– என்றார்.

இங்கு உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.எச்.எம். அல் இஹ்ஷான்,

எதிர்வரும் காலங்களில் நாங்கள் கட்சியின் செயற்பாடுகளை மிகுந்த வீரியத்துடன் கொண்டு செல்ல வேண்டும். அதற்காக வழங்கப்பட்டுள்ள பதவிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்று அதனூடாக பிரதேசத்தின் முன்னேற்றத்துக்கு வழியமைக்க வேண்டும் .– என்றார்.

இந்த நிகழ்வின்போது பின்வருவோருக்கு குறித்த துறைகளுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

முகாமையாளராக முகைதீன்பாவா அப்துல் றஹீம், செயலாளர் கே.எம். ஆதம்பாவா, பிரச்சார செயலாளர் முகம்மட் இப்ராகிம் முகம்மட் றஜாப்டீன், ஊடக செயலாளர் ஜௌபர் முகம்மட் பாஹிம், சட்ட செயலாளர் சட்டத்தரணி நூறுல் அமீன் முகம்மட் அஷாம், இளைஞர் செயலாளர் சுபைதீன் முகம்மட் சிரோஜன், இந்து செயலாளர் பூபாலப்பிள்ளை தாமோதரம், கத்தோலிக்கசெயலாளர்ராஜகுமார்பிரகாஷ், இஸ்லாமிய செயலாளர் சுலைமாலெப்பை ரவாப், தொழிற்சங்க செயலாளர் மீராலெப்பை முகம்மட் ஜமால்டீன், அமைப்பாளரின் செயலாளர் மீராலெப்பை இப்னு மஸ்ஊத், வர்த்தக சங்கங்களின் செயலாளர் ஆதம்பாவா அப்துல் சலீம், ஓட்டோ சங்கங்களின் செயாலாளர் முகம்மட் பாறூக் முகம்மட் இம்தாஸ், இணைப்பாளர் ஆமீதுலெப்பை அப்துல் கபூர், மீனவர் சங்கங்களின் செயலாளர் சின்னலெப்பை நாகூரார்.




நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கருவின் யோசனை

தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும், தேர்தல் முடிந்ததும் அந்த வாக்குறுதிகளை தூக்கிக் கடாசிக் காற்றில் பறக்க விடுவதும் இலங்கையின் பரவணி அரசியல் முறைமை தான்.

அதனை நன்குணர்ந்தமையினாலோ என்னவோ இலங்கையின் பழுத்த அரசியல்வாதியான முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியா தேர்தல் நெருங்கி வரும் இச்சமயத்தில் ஒரு முக்கியமான கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார். தேர்தலுக்கு முன்னர் ஒரு விடயத்தை முன்னெடுக்க அவர் வலியுறுத்துகின்றார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது குறித்து அரசியல் தலைவர்களும், புலம்பெயர் தமிழர்களும் நேர்மறையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி தீர்வை எட்டுமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரான கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

"வடக்கு மற்றும் தெற்கின் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவும், இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் மீண்டும் இடம் பெறாமல் இருப்பதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் கண்ணியத்துடன் வாழக்கூடிய உரிமையை வழங்குவதும், இந்தப் பிரச்சினைகளை எதிர்கால தலைமுறைகளுக்கு விட்டு வைக்காமல் இருப்பதும் எமக்குள்ள பாரிய கடமையாகும்.

"ஆகையால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான தலையீடுகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மேற்கொள்ள வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும்.

"13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பில் அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர் பகிரங்கமாகக் கருத்து தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

"தற்போது நாடாளுமன்றத்தில் சுயேச்சையாக செயற்பட்டு வரும் அதிக அளவிலான உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட எண்ணி இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருக்கின்றமை எமக்குத் தெரியும்.

"இது போன்ற முற்போக்கான அபிலாஷைகளைப் பாராட்டபட வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொள்கையில் தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி இவ்விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம்."- என்று அவர் சுட்டியிருக்கின்ற விடயம் ஆழ்ந்து நோக்கற்பாலது.

இந்தப் பேச்சுகளைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கான கடமை தமிழ் அரசியல் கட்சிகளைப் போன்றே அனைத்துக் கட்சிகளுக்கும் உள்ளது என்று குறிப்பிடும் அவர், குறுகிய அரசியல் காரணங்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால், அது, துரோகிகள் என்று எதிர்காலச் சந்ததியினர் குற்றஞ்சாட்ட வழிவகுக்கும். ஆகையால் ஜனாதிபதி உள்ளிட்ட நாடாளுமன்றம் உன்னத நோக்கத்துடன் இதில் தலையிட வேண்டும் என அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

அவர் சுட்டுவது முற்றிலும் சரியானது. வரப்போகின்ற தேர்தல்களில் வழமைக்கு மாறாக பேரினவாதக் கிளர்ச்சி அடங்கியிருக்கும் இந்தச் சமயம்தான் இது போன்ற நல்லிணக்கத்திற்கான முன்னோடி விடயங்கள் குறித்து ஆராய்ந்து தீர்க்கமான தீர்மானம் எடுக்க வேண்டிய வேளையாகும்.

தேர்தல் காலத்தில் முன் வைக்கப் படக்கூடிய வாக்குறுதியை, அதற்கு முன்னரே வட்ட மேசையில் செயலில் - கருத்தியலில் - காட்டும்படி கோருவது சாலப் பொருத்தமானதே.

இந்த முன்முயற்சியை, தனிப்பட்ட அரசியல் லாப நஷ்டக் கணக்கை ஒதுக்கி வைத்து விட்டு, நேர்மையுடன் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரா?

# நூறு கவிதைகளால் நோபல் உலக சாதனையில் இடம்பிடித்த அரநாயக்க கவிதாயினி நதீரா வசூக்!

( ஐ. ஏ. காதிர்கான் )



'தமிழ்த் தொண்டன்' பைந்தமிழ்ச் சங்கம் மற்றும் 'நிலாவட்டம்' இலக்கிய அமைப்பு ஆகியன இணைந்து, தொகுப்பாசிரியர் கவிஞர் என். ஜாகிர் உஷேன் தலைமையில், வட சென்னையில் நடத்திய பத்தாயிரம் கவிதைகள் உலக சாதனைத் தொகுப்பு நூலான 'கவித் தேனருவி' எனும் கவிதைத் தொகுப்பு நூலில், இலங்கையில் வாழும் மாவனல்லை அரநாயக்க தல்கஸ்பிட்டியவைச் சேர்ந்த எழுத்தாளர் ஆசிரியை திருமதி நதீரா வசூக் எழுதிய "விடியலைத் தேடும் விழிகள்" எனும் சிறப்புக் கவிதையும் பிரசுரமாகி, இலங்கை வரலாற்றில் சாதனை பதித்துள்ளது.

இந்தியாவில் நூறு கவிதைகளுடன் வெளியான இந்தச் சிறப்பு நிகழ்வில், இவர் தனக்கென ஓரிடத்தைப் பெற்று "நோபல் உலக சாதனை" படைத்து, அதற்கான விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.

சப்ரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை கல்வி வலயத்தில் அரநாயக்க கோட்டத்தில் தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை திருமதி நதீரா வசூக், தனது இந்த நோபல் பரிசைப் பெற்றுள்ளார்.

சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட முகநூல் குழுமங்களில் காதல் கவிதை, மரபுக் கவிதை, புதுக்கவிதை, அந்தாதி படக்கவிதை, சமூகக் கவிதை, தன்முனைக் கவிதை, இருவரிக் கவிதை, ஹைக்கூ, சிறுகதை என தொடர்ச்சியாக எழுதி வருவதோடு, இவரது கவிதைகள், சிறுகதைகள் என்பன பத்திரிகைகள் மற்றும் மின்னிதழ்களிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதுவரையில், கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் பலவற்றையும் பெற்றிருக்கின்றார்.

# 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் சாய்ந்தமருதில் நடந்த செயலமர்வு





(எம்.எப்.றிபாஸ், நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கான 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவுப் பழக்க வழக்கமும், தாய்,சேய் பராமரிப்பு மற்றும் குடும்ப நலத்திட்டம் தொடர்பான செயலமர்வு சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமுதாய அடிப்படை அமைப்புக்கள் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப்.றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வின் வளவாளராகவும், விசேட அதிதியாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஷத் காரியப்பர் கலந்து கொண்டார்.

'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவுப் பழக்க வழக்கமும் தாய்,சேய் பராமரிப்பு, தொற்றா நோய், மற்றும் குடும்ப நலத்திட்டம் பற்றிய பூரண விளக்கத்தை டாக்டர் அர்ஷத் காரியப்பர் வழங்கினார்.

சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம். கபீர், செயலாளர் எம்.ஜானூன், பொருளாளர் ஏ.ஆர்.ஷர்மிலா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# புத்தளம் பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்ற ஆசிரியர் ஆர்ப்பாட்டம்



**(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)**

சம்பள முரண்பாட்டைத் தீர்க்க கோரி ஆசிரியர்கள், அதிபர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி புத்தளம் பஸ் நிலையத்துக்கு முன்பாகவும் நேற்று (12) முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்து விட்டு வீதிக்கு இறங்கிய ஆசிரியர்கள், அதிபர்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் பதாதைகளை ஏந்திய வண்ணம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிள்ளைகளின் கல்வி உரிமையைப் பாதுகாத்தல், பெற்றோர்களின் கல்விக்கான பொருளாதார சுமையைக் குறைத்தல், இலவச கல்வியை தனியார் மயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல், அதிபர், ஆசிரியர், ஆசிரியர் ஆலோசகர்களின் நிலுவைச் சம்பளம் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் முன்வைக்கப்பட்டன.



# ஹட்டன் மாநகர சபை அலுவலக பகுதியில் குவிந்துள்ள குப்பைகளால் அசௌகரியம்

**(மஸ்கெலியா)**

ஹட்டன் மாநகர சபை அலுவலகத்துக்கு அருகில் உள்ள வாகன தரிப்பிடத்தில் குவிந்துள்ள பெருமளவான குப்பைகளால் துர் நாற்றம் வீசுகிறது. நுளம்புகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

ஹட்டன் டிக்கோயா மாநகர சபைக்குட்பட்ட வாகன நிறுத்துமிடத்தில் அதிகளவான குப்பைகள் சேகரிக்கப்படுவதால் அருகில் உள்ள ஹட்டன் ஸ்ரீ நிக்ரோதர ஆலய பிக்குகள் மற்றும் ஸ்ரீ பாத பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் சுற்றிலும் உள்ள குடியிருப்பாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த நிலைமைகள் தொடர்பில் ஹட்டன் மாநகர சபையின் செயலாளர் டி. வி. ப. பண்டாரவிடம் கேட்டபோது,

இந்தப் பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகளை அப்புறப்படுத்த உரிய இடமில்லாததால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை பல வருடங்களாக உள்ளது. இதற்கான தீர்வை பெற்றுக் கொள்ள மத்திய மாகாண ஆளுநர் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நகர சபை முதல்வர்கள் மேற் கொண்ட முயற்சி பலனற்ற நிலையில் உள்ளது.

குப்பை கொட்டும் இடம் ஒன்றை பெற்று கொள்ள முடியாது போய் உள்ளது என அவர் கூறினார்.

கொட்டகலை பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பை முற்றத்துக்கு இந்தக் குப்பைகளை கொண்டு செல்வதற்கு ஆலோசித்து வருவதாகவும், எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் இந்த இடத்தில் குவிந்துள்ள குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.




# வீரத்திடல் அல் ஹிதாயா பரிசளிப்பு

(எம்.எம்.ஜெஸ்மின்)

சம்மாந்துறை, வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை ஆராதனை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது கடந்த வருடம் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை, க. பொ. த சாதாரண தரப் பரீட்சை, க. பொ. த உயர் தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை அதிபர் திருமதி ஏ.எம்.முனாஷிர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயர் தரப் பரீட்சையில் 3ஏ சித்திகளைப் பெற்ற நான்கு மாணவர்களும் விசேடமாகக் கௌரவிக்கப்பட்டனர்.





## அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில்

# யானை தாக்கியதில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடு

(எம். எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சம்பூ நகர் விவசாய பாதையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் யானை தாக்கியதில் அட்டாளைச்சேனை 15 ஆம் பிரிவைச் சேர்ந்த ஆசிரியரான அப்துல் ஜப்பார் நிலுவர் மரணமடைந்தார்.

அரச சுற்று நிருபத்துக்கு அமைய அரச நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவாக வனப் பரிபாலன திணைக்களத்தால் பத்து லட்சம் ரூபாவை அட்டாளைச் சேனை பிரதேச செயலக அனர்த்தப் பிரிவு வழங்கியுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பங்கு பற்றலுடன் நிர்வாக உத்தியோகத்தர் கே.வி. சலீம் இதற்கான காசோலையை உயிரிழந்தவரின் மனைவியிடம் வழங்கி னார்.






# சாவகச்சேரி–மானிப்பாய் இந்துக் கல்லூரிகள் மோதும் இந்து சகோதரர்களின் போர்

## மானிப்பாயில் நாளை ஆரம்பம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் இந்துச் சகோதரர்களின் போர் (Battle of the Hindu Brothers) என்னும் பெயரில் துடுப்பாட்டப் போட்டியொன்று முதன்முறையாக நடைபெறவுள்ளது.

இப்போட்டியானது நாளையும் (14) நாளை மறுதினமும் (15) மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்து இரு பாடசாலை பழைய மாணவர்களுக்கான இருபது–20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு பழமை வாய்ந்த இரு பாடசாலைகளின் இந்தத் துடுப்பாட்டப் போட்டி ஆரம்பமாகின்றமை இப்பாடசாலைகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆவலர்களுக்கு பெருவிருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# குச்சவெளி பிரதேச ஆஸ்பத்திரிக்கு மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு






(எச்.சம். ஹலால்தீன்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக முபாரக் பவுண்டேசன் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியது.

மருந்து பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு குச்சவெளி வைத்திய சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச வைத்திய சாலையின் அதிகாரி டாக்டர் கே.எம்.எம். எம்.பண்டாரவிடம் இந்த மருந்துப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இதற்கான மருந்து பொருள்களை வழங்கிய முபாரக் பவுண்டேஷன் அமைப்பின் உரிமையாளர் என்.முபாரக்குக்கும் மக்கள் சார்பாகவும் வைத்தியசாலை சார்பாகவும் வைத்திய அதிகாரி நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச வைத்திய அதிகாரி, குச்சவெளி கே.வி.சி. அமைப்பின் உத்தியோகத்தர்கள், முபாரக் பவுண்டேஷன் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# நிந்தவூர் கபடி அணியினர் தேசிய மட்டத்தில் தங்கம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்வி அமைச்சுடன் இணைந்து இலங்கை பாடசாலை கபடி சங்கம் நடத்திய தேசிய மட்ட முதலாவது கடற்கரை சம்பியன்ஷிப் 2024 போட்டிகள் திருகோணமலை கடற்கரை மைதானத்தில் நடைபெற்றன.

நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை முதல்வர் ஏ.அப்துல் கபூர் ஆலோசனை வழிகாட்டலில் இப் போட்டிகளில் பங்குபற்றிய நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையின் 18 வயதுப் பிரிவு கபடி அணியினர் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.






# பெருந்தோட்டச் சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது தொடர்பிலான கலந்துரையாடல்

(ஆ.ரமேஸ்,எஸ் சதீஸ் )

இலங்கையில் பெருந்தோட்ட சமூகம் நாட்டில் ஏனைய சமூகங்களை போல் கல்வி, தொழில், மற்றும் பொருளாதாரம் வலுப்படுத்தல் உள்ளிட்ட நலத் திட்டங்களில் தமது வாழ்க்கை தரத்தை உயர்த்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நீர் வழங்கள் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் இந்த கலந்துரையாடல் திங்கட்கிழமை (10) இடம்பெற்றது.

இலங்கை மற்றும் மாலைத்தீவு நாடுகளுக்கான ஐக்கிய அமெரிக்கா சர்வதேச அபிவிருத்தியின் தூதரக பணிப்பாளர் கெப்ரியல் கிராவுக்கும், நீர் வழங்கள் மற்றுப் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது என்று அமைச்சின் ஊடக பிரிவு தெரிவித்தது.

இதன்போது இலங்கையில் வாழும் பெருந்தோட்டத் துறையினர் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மலையகத்தில் பயிரிடப்பட்டுள்ள பல்வேறு வகையான தேயிலை வகைகளை பொருளாதார அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்திகொள்ள முடியும் என்பது தொடர்பிலும், மலையக பிரதேசங்களில் பிரதான வீதியோரங்களில் சுயத்தொழிலில் ஈடுபட்டு வரும் சிறு வியாபாரிகள் ஊடாக தேயிலை தூள் வியாபாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மலையக பெருந் தோட்ட சமூகத்தினர் நாட்டில் ஏனைய சமூகத்தினர் போல் கல்வி,தொழில், பொருளாதாரம் உள்ளிட்ட நல மேம் பாட்டு திட்டங்களுடன் வாழ வலுப் படுத்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் ஏனைய சமுகங்களுடன் மலையக சமூகத்தை உள்ளடக்கி சர்வ தேச அபிவிருத்தியின் ஒத்துழைப்பை எவ்வாறு விரிவுபடுத்தலாம் என்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இருவருக்கும் இடையில் உடன்பாடு ஒன்றும் ஏற்படுத் திக்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அதேநேரத்தில் மலையக பெருந் தோட்ட சமூகத்தின் பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், இந்த மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், ஏனைய சமூகத்திலிருந்து எமது சமூகம் ஓரங்கட்டப்படுவதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் சமூகத்தை மேம்படுத்துவதற்கும் அந்தப் பணியைச் செய்வதில் நான் உறுதியாக இருக்கின்றேன் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்தார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாணவர் சமூகத்தை கைக்குள் போட்டுள்ள திறன் பேசிகள்...!



அன்று மனிதன், மனிதனோடு தொடர்பை மேற்கொள்ளவும் மனித தேவைகளை இலகுவான முறையில் பூர்த்தி செய்யவும் மனிதனால் மனித கைக்குள் அடங்கும் வகையில் உருவாக்கப்பட்டவையே கையடக்கத் தொலைபேசிகள் ஆகும். ஆனால் இவை இன்று அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக திறன் பேசிகள் (Smart Phone) என்ற பெயரோடு இன்றைய சமூகத்தை அதன் கைக்குள் அடக்கி வைத்துள்ளன.

“கூவும் செல்போனின் நச்சரிப்பை அணைத்துக் கொஞ்சம் சில்வண்டின் உச்சரிப்பை கேட்போம்” என பல வருடங்களுக்கு முன்னர் வெளியான சிவாஜி படப் பாடலில் அழகாக வரிகள் அமைத்திருக்கிறார் நா. முத்துக்குமார்.

முன்னைய சமூகத்தினர் ஏனையவருடன் பேசுவதற்காக மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்தினர். ஆனால் இன்று குழந்தைக்கு சோறூட்டுவதற்குப் பயன்படுத்துவது முதல் பணத்தை வங்கியில் வைப்பு செய்வதுவரை அனைத்தையும் செய்து விடுகின்றன இந்த திறன் பேசிகள்.

இலங்கையில் பொதுவாகக் கொவிட்-19 பரவலை தொடர்ந்தே இணையவழி கற்கை ஆரம்பமானது. இதனை அடிப்படையாக வைத்து அனைத்து மாணவர்கள் மத்தியிலும் திறன்பேசிகளின் பாவனை புழக்கமுறத் தொடங்கி விட்டன. ஆனால் இணையவழி கற்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் திறன்பேசிகளின் பாவனையை குறைத்துக் கொள்ள முடியவில்லை என்றே கூற முடியும்.

2011 ஆம் ஆண்டில் உலக சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின்படி 5 பில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துகின்றார்கள். நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலயங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும். ஆனால் இன்றைய சமூகத்தினர் 5 மணித்தியாலயங்களுக்கு மேல் பயன்படுத்துகின்றார்கள் என்றும் ஆய்வுகள் கூறுகின்றன.

தொடர்ச்சி▼



# மாணவர் சமூகத்தை கைக்குள் போட்டுள்ள திறன் பேசிகள்...!

தொடர்ச்சி▲

சீனாவில் குழந்தைகள் நாளொன்றுக்கு 60 நிமிடங்கள் மட்டுமே தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டும் என 2021 இல் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் நம் நாட்டில் குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை நம்மில் எத்தனையோ பேர் 24 மணித்தியாலயங்களும் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றோம்.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு ஆய்வு முடிவில் 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ளனர் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தென்மாகாணத்தில் உள்ள 400 பாடசாலை மாணவர்களிடம் வைத்திய குழுவொன்று ஆய்வொன்றை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திர ஸ்ரீ கூறியுள்ளார். இதில் பல சிறுவர்கள் இரவில் தூக்கமின்றி கவலையுடன் இருப்பதாகவும், இவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் வெளிவந்துள்ளது.

கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகி உள்ள சிறுவர்களுக்குநீரிழிவுநோய்இருப்பதும்கண்டறியப்பட்டுள்ளது. அவர்களது உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றனர் என்றும் அதனைப் பெற்றோர்களால் கட்டுப்படுத்த முடியாது உள்ளது எனவும் ஆய்வு முடிவு கூறுகின்றது.

அவசியமாக இருந்தால் மட்டும் பிள்ளைகளுக்கு ஒரு மணித்தியாலயத்துக்கு குறைந்த அளவு கையடக்க தொலைபேசிகளை வழங்கும் படி வைத்திய குழு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாக காணப்படுகின்றது.

திறன்பேசிகளால் பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. ஆனால் "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது போல இன்று அளவுக்கு மீறி திறன்பேசிகள் எனும் போதையில் அடிமையாகி விட்டார்கள். இன்றைய சமூகத்தினருக்கு உணவின்றியும் ஒரு நாள் இருந்து விடலாம் இன்டர்நெட் கார்ட் (Internet Card) இல்லாமல் வாழ முடியாதுள்ளது.

தேவையற்ற செயலிகளின் பதிவிறக்கம், காணொளிகள் பதிவிறக்கம், இணையவழி விளையாட்டுக்கள், போதைப் பொருள் பாவனை, தகாத உறவுகள், மன அழுத்தங்கள், உடல் நோய்கள் இதனால் குடும்பங்களுக்கிடையே முரண்பாடுகள், சமூக சீரழிவுகள் என பல்வேறு சவால்களை ஏற்படுத்தி விடுகின்றன இந்தத் திறன் பேசிகள்.

எவ்வளவுதான் பத்திரிகைகள், ஊடகங்கள் ஊடாக கைபேசியின் பாவனையை குறையுங்கள் என பற்பல செய்திகள் பரப்பப்பட்டாலும் அவை இன்றும் அதிகரித்துக் கொண்டுதான் உள்ளன.

நமது முன்னைய தலைமுறையினர் நடக்க, பேச, பழக, சமைக்க, வாழ என பல்வேறு விடயங்களை சமூகத்திடம் இருந்து கற்றுக் கொண்டார்கள். ஆனால் நம் தலைமுறையினர் இவை அனைத்தையும் திறன்பேசிகளிடமிருந்து கற்றுக் கொள்வதுடன் அவர்களுக்கும் சமூகத்துக்கும் தேவையற்ற விடயங்களையும் கற்றுக் கொண்டு சமூகத்திலிருந்து தனிமையாகி விடுகின்றார்கள். எந்தளவுக்கு நாம் கைபேசிகளுடன் நேரத்தை செலவிடுகின்றோமோ அந்தளவுக்கு நாம் குடும்பத்தில் இருந்தும் சமூகத்தில் இருந்தும் பிரிந்து செல்கின்றோம்.

சூழலோடும் சமூகத்தோடும் ஒன்றித்து வாழ்ந்தால்தான் சூழலில் இருந்து வரும் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூடியவாறு மனிதன் மாற முடியும். அன்று பெற்றோர்கள் வெளியில் செல்ல வேண்டாம் என பிள்ளைகளிடம் கூறிய காலம் மாறி இன்று வெளியில் சென்று விளையாடு என்று கூறுமளவுக்கு இன்றைய சமூகத்தினர் திறன்பேசிகளுடன் ஒன்றித்து வாழ்கின்றார்கள் என்றே கூற வேண்டும்.

மனிதன் மனிதனோடு எங்கிருந்தாலும் தொடர்பை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட இந்தக் கைபேசிகள் மனித முகங்களைப் பார்த்துப் பேச முடியாத அளவுக்கு மாற்றி விட்டன.

எது எவ்வாறாக இருந்தாலும் "கத்தி கொண்டு கனியையும் நறுக்கலாம், பிறர் உயிரையும் பறிக்கலாம்" என்பதுபோல எந்த ஒரு விடயமாக இருந்தாலும் நன்மையும் காணப்படும் அதேபோல தீமைகளும் காணப்படும்.

அதுபோலவே திறன்பேசிகளை நம் திறன்களை வளர்ப்பதற்கு பயன்படுத்துவோமாக இருந்தால் நாமும் சமூகத்தை சீர்படுத்தி சிறந்த பிரஜையாக பிறருக்கு எடுத்துக்காட்டாக வாழ முடியும்.

**தேவலிங்கம் நிலக்ஷனா,**
[கல்வி, பிள்ளை நலத்துறை சிறப்பு கற்கை, நான்காம் வருடம், கிழக்குப் பல்கலைக்கழகம்]



# கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டது

## ஜுலை 02 திறக்கப்பட்டு 14ஆம் திகதி மூடப்படவுள்ளது

**(வடிவேல் டினேஸ்)**

கதிர்காம ஆலயத்தின் உற்சவத்துக்குப் பாத யாத்திரையை மக்கள் தற்போது ஆரம்பித்த நிலையில் எதிர்வரும் ஜுலை மாதம் 02 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு 14 திகதி மூடப்படவுள்ளது என்று அம்பாறை மாவட்ட சேவற்கொடியேன் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 30 திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப்பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு ஜுலை 11 மூடப்படும் என்று அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் உகந்தை கடந்த 07 திகதி ஆலயத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் கதிர்காம ஆலயத்தில் கடந்த 12ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் உகந்தை காட்டுப்பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு எதிர்வரும் ஜுலை மாதம் 02 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு 14 திகதி மூடப்பவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்கூட்டியே 30 திகதியை மையமாகக் கொண்டு மக்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்ட நிலையில் திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளது.

காட்டு வழியாக பாதயாத்திரை மேற்கொள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளது என்றும் சமூக அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஜுலை 06 திகதி கதிர்காம கொடியேற்றம் இடம் பெற்று 22 திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடைகின்றது.

காட்டுப்பாதை திகதி மாற்றங்கள் தொடர்பில் லாகுகலை பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

கதிர்காம உற்சவம் தொடர்பான கூட்டங்கள் மூன்று கட்டமாக இடம் பெறும்.

முதலாம் கட்ட கூட்டமானது கதிர்காமத்தில் இடம் பெறும். இதன் போது தெரிவிக்கப்படும் கால எல்லைக்குள் காட்டுப்பாதை திறந்து மூடப்படும். கால எல்லை மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் அங்கு தீர்மானிக்கப்படும்.

இதன் பின்னர் அம்பாறை மாவட்ட ஆரம்ப கட்ட கூட்டம் உகந்தையில் அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம் பெற்று கதிர்காமத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு கருத்துக்கள் பெறப்படும்.

மூன்றாம் கட்டமாக உகந்தையில் விளக்கமளிக்கப்பட்ட முடிவுகள் கதிர்காமத்தில் இடம் பெறும் இரண்டாம் கட்ட இறுதி கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

இவ் வருடத்திற்கான இறுதி முடிவானது கடந்த 10 திகதி கதிர்காமத்தில் இடம் பெற்ற கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டுள்ளது என்று லாகுகல பிரதேச செயலாளர் நவேந்திரராஜா நவநீதராஜா தெரிவித்தார்.





# இலங்கை போக்குவரத்துச் சபை கல்முனை ஊழியர் போராட்டம்!

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனை சாலை ஊழியர்கள் இன்று (13) போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் ஒருங்கிணைந்த சேவை வேண்டாம் என்று தெரிவித்தும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை சாலை ஊழியர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தனித்துவத்தைச் சிதைக்காதே, போக்குவரத்து அமைச்சு தனியாருக்காகவா என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நேர கால தாமதம் என குறிப்பிட்டு அம்பாறை கல்முனை ஒருங்கிணைந்த சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழியர்களுக்கும் தனியார் பஸ் ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பில் முடிவடைந்திருந்து.

இதன்போது இரு தரப்பினர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்திருந்தனர்.

இந்த நிலையில் கல்முனை தலைமையகப் பொலிஸாரால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இன்று போராட்டம் இடம்பெற்றது. போராட்டத்தால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அத்துடன் போதிய பஸ்கள் இல்லாத காரணத்தால் சில பாடசாலை மாணவர்கள் நீண்ட நேரம் பஸ் தரிப்பிடத்தில் காத்திருந்தனர்.

சம்பவ இடத்தில் கல்முனைத் தலைமையக பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.









# குவைத் தீ விபத்தில் மரணமடைந்த இந்தியர்களின் உடல்களை அடையாளம் காண மரபணு சோதனை

## சடலங்களை ஏற்றி வர இந்திய விமானப்படை விமானம் விரைவு

**புதுடெல்லி, ஜுன் 13**

குவைத் நாட்டின் மங்காப் நகரில் தொழிலாளர்கள் தங்கியிருந்த அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் இந்தியர்கள் உள்பட 50 பேர் பலியாகியுள்ளனர். இதில் தமிழகத்தை சேர்ந்த 5 பேர் உயிரிழந்திருக்கலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்து அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உள்ளனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. எனவே பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

இந்நிலையில், இத்தாலி செல்வதற்கு முன்பாக பிரதமர் மோடி குவைத் தீ விபத்து தொடர்பாக அவசர அவசரமாக மத்திய மந்திரிசபை கூட்டத்தில் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு மத்திய அரசு சார்பில் தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இந்த தீ விபத்தில் உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை அடையாளம் காண டி.என்.ஏ. பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை தாயகம் கொண்டு வர குவைத் விரைகிறது இந்திய விமானப்படை விமானம்.

அனைவரின் உடல்களையும் ஒரே விமானத்தில் கொண்டு வரும் விதமாக மத்திய அரசு இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# 17 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை பா.ஜ.கவின் எடியூரப்பா மீது குற்றச்சாட்டு!

## போக்சோ வழக்கில் விசாரணைக்கு சி.ஐ.டி. அழைப்பாணை

**பெங்களூர், ஜுன் 13**

கர்நாடகா மாநில முன்னாள் முதல் மந்திரியும், பா.ஜ.க. மூத்த தலைவருமான பி.எஸ்.எடியூரப்பா மீது 17 வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட சிறுமியின் 54 வயது தாயார், கடந்த மார்ச் 14 ஆம் திகதி சதாசிவநகர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அதன்பேரில், 2 பிரிவுகளின் கீழ் எடியூரப்பா மீது பொலிஸார் மீது வழக்குப்பதிவு செய்தனர். பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் தனது புகாரில், “கல்வி தொடர்பாக தனது மகளுக்கு நீதி கிடைக்க எடியூரப்பாவின் உதவியை நாட அவரது வீட்டிற்கு சென்றோம். அப்போது எங்களது குறைகளை சில



நிமிடங்கள் கேட்ட எடியூரப்பா, பின்னர் எனது மகளை ஓர் அறைக்கு அழைத்துச் சென்று பாலியல் தொல்லை கொடுத்தார்” எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

இந்த வழக்கு, பின்னர் சி.ஐ.டி. விசாரணைக்கு மாற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து சி.ஐ.டி. அதிகாரிகள் எடியூரப்பாவின் வாக்குமூலத்தை பதிவு செய்தனர். இந்நிலையில் இந்த வழக்குத் தொடர்பாக மீண்டும் விசாரணைக்கு ஆஜராகுமாறு எடியூரப்பாவுக்கு சி.ஐ.டி நேற்று சம்மன் அனுப்பியுள்ளனர். இதற்கிடையே எடியூரப்பா, தனது வழக்கறிஞர்கள் மூலம் சி.ஐ.டி. முன் ஆஜராக ஒரு வாரம் அவகாசம் கோரியுள்ளார்.

இந்த சம்மன் அனுப்பப்பட்ட சில மணி நேரங்களிலேயே எடியூரப்பா, இந்த வழக்கை ரத்துசெய்யக்கோரி அம்மாநில ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

முன்னதாக, கடந்த மாதம் புகார் அளித்த சிறுமியின் தாய் மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டர். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# மங்கோலியாவில் உறைபனியால் எழுபது லட்சம் கால்நடைகள் பலி

உலன்பாட்டர்,ஜுன்13

மங்கோலியாவில் இயல்பை காட்டிலும் பயங்கரமான பனிப்புயல் வீசி வருகிறது. அதனால் அங்கு 70 லட்சம் கால்நடைகள் இறந்துள்ளன என்று கூறப்படுகின்றது.

ரஷியாவுக்கும், சீனா மற்றும் தீபெத்துக்கு இடையில் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் மங்கோலியா அமைந்துள்ளது. இதனால் வருடத்திற்கு 10 மாதங்கள் மங்கோலியாவில் மைனஸ் 30 டிகிரி செல்சியல் அளவில் குளிர்ந்த வானிலையே நிலவும். இந்தநிலையில் மங்கோலியாவில் இயல்பை காட்டிலும் பயங்கரமான பனிப்புயல் வீசி வருகிறது.

இதன் காரணமாக அங்குள்ள மாகாணங்களில் கடுமையான பனிப்பொழிவு நிலவுகிறது. இதன் காரணமாக மங்கோலியா நாடு முழுவதும் பனியால் உறைந்து உள்ளது. விளைநிலங்கள், மேய்ச்சல் நிலங்கள் ஆகியவை பனிப்புயலுக்கு சேதமடைந்தன. இதனால் அங்கு உணவு பொருள்களை உற்பத்தி செய்ய முடியாமல் பொதுமக்கள் தவித்து வருகிறார்கள். இந்தநிலையில் கடுமையான வறட்சி காரணமாக ஏற்பட்டுள்ள உணவு பொருள் தட்டுப்பாட்டால் மங்கோலியாவில் 70 லட்சம் கால்நடைகள் பலியாகி உள்ளன என அந்த நாட்டின் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# குவைத் அடுக்குமாடிக் குடியிருப்பில் தீ! இந்தியர்கள் ஐம்பது பேர் வரை மரணம்

## அவர்களில் ஐவர் தமிழர்

குவைத் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் பெரும்பாலும் இந்தியர்கள் உள்ளடங்கலாக 50 பேர் பலியாகியுள்ளானர். அவர்களில் ஐவர் தமிழர்கள். உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

குவைத்தின் தெற்குபகுதியில் உள்ள அகமதி மாகாணத்தின் மங்காப் நகரில் 6 மாடிகளை கொண்ட குடியிருப்பு உள்ளது. இந்த குடியிருப்பில் ஒரு தனியார் கட்டுமான நிறுவனத்தின் ஊழியர்கள் ஏராளமானோர் தங்கியுள்ளனர். இந்த நிலையில் கட்டடத்தின் சமையலறையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் திடீரென தீப்பிடித்தது. இந்த தீ விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீயணைப்பு வீரர்கள் பல மணி நேர போராட்டத்துக்கு பின் தீயை அணைத்தனர்.

இந்த தீ விபத்தில் சுமார் 50 பேர் உயிரிழந்து இருக்கின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இதில் இரண்டு தமிழர்களும் பலியாகியுள்ளனர் என நேற்றுத் தகவல் வெளியாகியது. இதனிடையே மேலும் ஒரு தமிழர் பலியாகியிருக்கும் தகவல் கிடைத்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டம் தென்னவனூர் பகுதியைச் சேர்ந்த கருப்பணன் ராமு, குவைத் தீ விபத்தில் மூச்சுத்திணறி உயிரிழந்து இருக்கின்றார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். இதன் மூலம், குவைத் தீ விபத்தில் பலியான தமிழர்களின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்துள்ளது. இதற்கிடையே, குவைத் தீ விபத்தில் 5 தமிழர்கள் உயிரிழந்து இருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்து இருப்பதாகவும் எனினும், இது தொடர்பாக அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகவில்லை என்றும் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறியுள்ளார்.

கனடா முரசு
பக்கங்கள் 06
வியாழக்கிழமை 13/06/2024

## வட்டி வீதக் குறைப்பால் திருப்தி இல்லையாம்!

அண்மையில் கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை சிறிதளவு குறைத்திருந்தது. எனினும் இந்தத் தீர்மானம் தொடர்பில் அதிருப்தி வெளிடப்பட்டுள்ளது. C2




# ரொறன்றோவில் பரவுகின்ற மூளைக்காய்ச்சல் ரக நோய்

## மாகாண சுகாதாரத்துறை எச்சரிக்கை

**கனேடிய ரொறன்றோவில், உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பயங்கர நோய் ஒன்று பரவிவருவதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.**


**கனடாவின் ரொறன்றோவில்,** invasive meningococcal disease (IMD) **என்னும் மூளைக்காய்ச்சல் ரக நோய் அதிகரித்து வருவாதாக மாகாண சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.**

2002ஆம் ஆண்டுக்குப்பின் வழக்கமாக காணப்படும் தொற்று எண்ணிக்கையைவிட தற் போது பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை அதிகமாகியுள்ளது. 13 பேர் இந்த தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இருவர் உயிரிழந்துள்ளார்கள்.

வருடாந்தம் கனடாவில் இந்நோயினால் இருநூறுபேர்வரைபாதிக்கப்படுகின்றார்கள். அவர்களில் சுமார் பத்து வீதத்தினரை அந்நோய் காவு கொள்கிறது என்று மருத் துவ வட்டாரங்கள் கூறுகின்றன.

Invasive meningococcal disease (IMD) அல்லது மெனிஞ்சைட்டிஸ் (meningitis) என்னும் இந்த தொற்று, Neisseria meningitidis என்னும் பாக்டீரியாவால் பரவும் நோய்த்தொற்றாகும். எச்சில் மூலமும், பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிப் பழகுவதன் மூலமும் இந்நோய் பரவும்.

மூளையில் மீதுள்ள மெல்லிய உறை மற்றும் தண்டுவடம் வரையும், இரத்தக் குழாய்களுக்குள்ளும் இந்த தொற்று பரவக்கூடும். வேகமாக பரவி, அது மரணத் தையும் ஏற்படுத்திவிடக்கூடும். C2






# மார்க்கம் பகுதியில் அதிகாலை வீட்டின் மீது துப்பாக்கிச் சூடுகள்

கனடாவின் மார்க்கம் பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை, ஜூன் 11, 2024 அன்று, அதி காலை வேளையில் சுமார் 3:30 மணியளவில் மார்க்கம் குடியிருப்புத் தொகுதி யொன்றில் இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

9 ஆவது லைன் மற்றும் நெடுஞ் சாலை 7 பகுதியில் உள்ள கெனில்வொர்த் கேட்டில் உள்ள ஒரு வீட்டை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தகவல்களுக்காகப் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

பொலிஸ் அதிகாரிகள் அங்கு சென்றபோது, வீடு பல தோட்டாக்களால் தாக்கப்பட்டதற்கான அறிகுறிகளைக் கண்டனர். குடியிருப்புக்கு முன்னால் உள்ள சலையில் பல ஷெல் உறைளை (வெற்றுத் தோட்டாக்களை) பொலிஸார் மீட்டுள்ளனர்.




துப்பாக்கிச் சூடு நடந்தபோது வீட்டில் ஏராளமானோர் இருந்தனர். எனினும் எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

துப்பாக்கிச் சூடு நடந்தபோது, அடர் நிறம், நான்கு கதவுகள் கொண்ட செடான் வாகனம் ஒன்று வீட்டின் முன் காணப்பட்டது. சிறிது நேரம் கழித்து, அந்த வாகனம் கெனில்வொர்த் கேட்டில் மேற்கு நோக்கித் தப்பிச் சென்றது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் யோர்க் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் புலனாய்வாளர்கள் யாரேனும் சாட்சிகள் இருந்தால் தகவல் தர முன்வருமாறு அழைத்தனர். சந்தேக நபர்களை அவர்கள் தேடி வருகின்றனர்.

சம்பவத்தின் போது அப்பகுதியில் வீடியோ கண்காணிப்பு அல்லது டாஷ் கேம் காட்சிகள் இருக்கும் எவருடனும் அதிகாரிகள் ஊடாட விரும்புகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ரொறன்றோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனாலும், உரிய நேரத்தில் ஆன்டிப யாட்டிக் சிகிச்சை அளிப்பதன் மூலம், இந்த நோய்த்தொற்றை குணமாக்கவும் முடியும்.

இந்த நோயால் யார் வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம் என்றாலும், ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகள் மற்றும் தடுப்பூசி பெறாத பதின்ம வயதினர் மற்றும் இளம் வயதினரை இந்த நோய் அதிகம் பாதிக்கும்.

இந்த meningitis நோயின் அறிகுறிகளாவன, காய்ச்சல், உடல் வலி, மூட்டு வலி, தலைவலி, கழுத்து இறுகியது போன்ற உணர்வு மற்றும் வெளிச்சத்தைப் பார்க்க இயலாமை போன்றவை யாகும்.

இந்த அறிகுறிகள் யாருக்காவது காணப்படுமானால், உடனடியாக அவர்கள் மருத்துவரை சென்று பார்க்குமாறு ரொரன்றோ சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

## வட்டி வீதக்...

இந்த வட்டி வீதக் குறைப்பானது வீடுகளை கொள்வனவு செய்ய காத்திருப்போருக்கு பயனில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் வட்டி வீதம் 5 வீதத்திலிருந்து 4.75 வீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இந்த வட்டி வீத குறைப்பானது வீடுகளை கொள்வனவு செய்வோருக்கு சாதகமான நிலையை உருவாக்கவில்லை என அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

The Ipsos முன்னெடுத்த கருத்துக் கணிப்பு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வட்டி வீதம் குறைக்கப்பட்டாலும் அடகுக் கடன் அடிப்படையில் வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவுகள் மிக அதிகமாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.





# காட்டுத் தீப் பருவகாலம் கனடாவில் ஆரம்பமானது

## இது வரையில் பாதிப்பு குறைவாம்

கனடாவின் காட்டுத்தீ பருவகாலம் (சீசன்) மெதுவாக தொடங்கியுள்ளது.

ஆயினும் இந்த ஆண்டு இதுவரை தீ கபளிகரம் செய்த காட்டின் ஹெக்டேர் அளவு, இது வரையான பத்து ஆண்டு சராசரியை விட குறைவாக உள்ளது என்று மூத்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் ஒட்டாவாவில் நேற்றுப் புதன்கிழமை தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு இந்த நேரத்தில், கிட்டத்தட்ட மூன்று மில்லியன் ஹெக்டேர் காடுகள் காட்டுத்தீயால் அழிக்கப்பட்டன. இந்த வருடத்தில் இதுவரை 500,000 ஹெக்டேர்களையே கனடா தீயினால் இழந்துள்ளது.

2023 இல் விட முன்னேற்றம் இம்முறை ஏற்படலாம் என்று கருதினாலும், பதிவு செய்யப்பட்ட மிக மோசமான காட்டுத்தீ சீசனை கடந்த ஆண்டு ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் கனடா கண்டது, அதைப் போலவே இந்த ஆண்டும் ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் நிகழலாம் என்பதற்கான முன்னறிவிப்புகள் தோன்றுவதால், இந்த சுமுக நிலை நீடிக்காமல் போகலாம் என அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

“துரதிர்ஷ்டவசமாக, இந்த முன்னறிவிப்பு ஓர் ஆபத்தான மற்றும் மிகவும் கணிக்கக்கூடிய போக்காக மாறியுள்ளது” என்று எரிசக்தி மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் ஜொனாதன் வில்கின்சன் புதன்கிழமை தெரிவித்தார்.

“வரவிருக்கும் கோடை மாதங்கள் கனடாவின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பை விட வெப்பமாக இருக்கும் என்று காலநிலை முன்னறிவிப்புகள் குறிப்பிடுகின்றன. நாட்டின் சில பகுதிகள் இயல்பை விட குறைவான மழையைக் காணும்”

நாடு முழுவதும் தற்போது 69 காட்டுத் தீ பரவல்கள் இடம்பெறுகின்றன. எட்டு இடங்கள் தீப்பிடித்து எரிகின்றன என அரசு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். தற்போது பெரும்பாலான காட்டுத்தீ ஆல்பர்ட்டா மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் அவதானிக்கப்பட்டுள்ளது. கியூபெக்கில் ஒரு சில இடங்களிலும் காட்டுத் தீ அவதானிக்கப்பட்டுள்ளது.

காட்டுத்தீயை எதிர்த்துப் போராட எந்த மாகாணமும் அல்லது பிரதேசமும் இதுவரை மத்திய அரசின் உதவியைக் கோரவில்லை, மேலும் இந்த நிலைமை குறுகிய காலத்தில் மாறும் என்று எதிர்பார்க்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

“இன்று வரை ஒட்டுமொத்த தீ தீவிரம் கடந்த ஆண்டை விட குறைவாக இருந்தாலும் - ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மோசமான சூழ்நிலையில் முன்னர் எதிர்பார்த்ததை விட குறைவாக இருந்தாலும் - அது நிச்சயமாக விரைவாக மாறக்கூடும்” என்று பொது பாதுகாப்புக் கனடாவின் அரசாங்க செயல்பாட்டு மையத்தின் இயக்குனர் ஜெனரல் டெரிக் ட்ரெஹெர்ன் கூறினார்.





# பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு கான்ஸ்டபிள் பதவியில் இடைநீக்கம்

## 2010 சம்பவம் குறித்து இப்போது விசாரணை

றொறன்றோவில்,ஜூன்13

றொறன்றோ பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 14 வருடங்களின் முன்னர் தனது பொலிஸ் கடமையின் போது சந்தித்த பெண் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்ததார் என்ற அடிப்படையில் குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கிறார்.

அண்ட்ரூ கார்கில் என்ற இந்த பொலிஸ் கான்ஸ்டபிள் அந்த நபரை 2010 இல் சந்தித்தார் என்றும் அந்த ஆண்டும் அடுத்த வருடமும் அவருடன் தகாத தனிப்பட்ட பாலியல் உறவைப் பேணி வந்தார் என்றும் கூறப்படுகின்றது.

அப்போதே அந்த அதிகாரி அந்த நபரை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது.

அண்ட்ரூ கார்கில் (வயது49) இதற்காக நேற்றுப் புதன் கிழமை கைது செய்யப்பட்டார். பாலியல் வன்கொடுமை மற் றும் நம்பிக்கையை மீறினார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அதை அடுத்து கான்ஸ்டபிள் சம்பளத்துடன் பதவியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். ஜூலை 29 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக அவர் பணிக்கப்பட்டுள்ளார்.




53 ஆவது பிரிவில் அந்த அதிகாரி கடந்த 22 வருடங்களாகப் பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு தனித்தனி சம்பவங்களில் தவறான நடத்தை குற்றச்சாட்டுகளுக்காக தனது வழக்கறிஞர் மூலம் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, கார்கில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

# எட்டு மாதப் பெண் குழந்தையை ஒரு வாரமாகத் தேடும் பொலிஸ்

## பெற்றோர், தாத்தா - பாட்டி கைது

பெற்றோரால் கைவிடப்பட்டதாகக் கருதப்படும் எட்டு மாதக் குழந்தையைக் காணவில்லை என கென்டக்கியில் பொலிஸார் சுமார் ஒரு வாரமாகத் தேடி வருகின்றனர்.


காணாமல் போன மியா டக்கரின் பெற்றோர்கள் இருவரும் வியாழனன்று கைது செய்யப்பட்டனர், பொலிஸார்குழந்தைக்கு வழமையான நலன்புரி சோதனையை மேற்கொள்ள முயன்ற போதே அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்று கென்டக்கி மாநில பொலிஸாரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுமியின் தாய் டெஸ்லா டக்கர், (வயது29) மற்றும் தந்தை கேஜ் ரூட் (30) போதைப்பொருள் பாவனை மற் றும் குழந்தைகளை கைவிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், போதைப்பொருள் கடத்தல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் மியாவின் தாத்தா பாட்டியும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நான்கு குடும்ப உறுப்பினர்களும் ஓஹியோ கவுண்டியில் உள்ள ஒரு இணைக்கப்படாத சமூகமான ரெனால்ட்ஸ் நிலையத்தில் வசிப்பவர்கள்.

மியாவின் புகைப்படத்தை கென்டக்கி மாநில காவல்துறை முகப் புத்தகத்தில் பகிர்ந்துள்ளது. அவள் பழுப்பு நிற முடி மற்றும் பச்சை நிற கண்கள் கொண்டவள் என்று விவரிக்கப்படுகிறாள்.






# காத்திருக்கின்றது ‘மெகா பூகம்பம்’!

## தெற்கு பிரிட்டிஷ் கொலம்பியா முதல் வொஷிங்டன் மாநிலம் வரை இலக்கு

பூமிக் கிரகத்தில் சில சக்திவாய்ந்த பூகம்பங்களை உருவாக்கும் திறன் கொண்ட ஒரு பகுதியில் - கடற்பரப்பிற்கு அடியில் - என்ன நடக்கிறது என்பது பற்றிய ஒரு புதிய ஆய்வு, தெற்கு பிரிட்டிஷ் கொலம்பியா முதல் வொஷிங்டன் மாநிலம் வரை பூகம்பப் பேராபத்து இருப்பது பற்றிய எச்சரிக்கையைத் தந்துள்ளது.

அந்த ஆபத்து முன்னர் எதிர்பார்த்ததை விட மிகவும் மோசமானதாக இருக்கும் என எச்சரிக்கப்படுகின்றது.

கனடாவில் அதிக பூகம்பப் பேராபத்துள்ள பிரதேசமாக பிரிட்டிஷ் கொலம்பியாவே கருதப்படுகின்றது. அதனை ஒட்டிய எச்சரிக்கையே இப்போது வெளியாகியுள்ளது.

புதிய தரவு ‘உண்மையில் அதிர்ச்சிகரமானது’ என்று நேச்சுரல் ரிசோர்சஸ் கனடாவின் பூகம்ப நில அதிர்வு நிபுணர் ஜான் காசிடி கூறினார்.

“ஒரிகான், வொஷிங்டன், வான் கூவர் தீவின் கடற்கரையில் என்ன நடக்கிறது என்பதற்கான சில சிறந்த பார்வையை இந்த ஆய்வு வழங்குகிறது.” - என்றும் கூறப்பட்டது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் தென் கடற்கரையானது, வான்கூவர் தீவின் கடற்கரையிலிருந்து வடக்கு கலிபோர்னியா வரை சுமார் ஆயிரம் கிலோ மீற்றர் காஸ்காடியா சப்டக்ஷன் சோன் எனப்படும் பகுதியில் தவறான கட்டமைப்பில் பரவியுள்ளது. இந்த பகுதியில், கடல் தளத்தின் கீழ் உள்ள டெக்டோனிக் தகடுகள் வட அமெரிக்க தட்டுக்கு கீழ் மெதுவாக சறுக்கி வருகின்றன.

அத்தகைய செயல்முறையினால் கட்டமைக்கப்பட்ட அழுத்தம் இறுதியில் திடீர், சக்திவாய்ந்த பூகம்பங்களாக வெளிப்படுவதை விஞ்ஞானிகள் நீண்ட காலமாக அறிந்திருக்கின்றனர்.

ஆயினும் காஸ்காடியா மண்டலத்தில் உள்ள குறிப்பிட்ட கடலுக்கடியில் நிலைமைகள் பற்றிய அவர்களின் அறிவு, இப்போது வரை, ‘தெளிவில்லாதது’ என்று கொலம்பியா பல்கலைக்கழக கடல் புவி இயற்பியலாளரும் ஆய்வு இணை ஆசிரியருமான சுசான் கார்போட் விளக்கினார்.

புவியியல் ரீதியாகக் கடும் செயல்பாடுகளைக் கொண்ட இந்தப் பகுதியின் விரிவான வரைபடங்களை ஸ்கான் செய்வதற்காக 5,500 கிலோமீட்டர் கடற்பரப்பில் இணைக்கப்பட்ட 1,200 சிறப்பு மைக்ரோஃபோன்களுடன் நீர்ப்புகா கேபிள்களை இழுத்துச் செல்ல ஆராய்ச்சியாளர்கள் 2021 இல் 41 நாள்கள் செலவிட்டு அந்தப் பணியை ஒப்பேற்றினர்.

அந்த ஸ்கானின் தரவுகளின் அடிப்படையில் -

சர்ச்சைக்குரிய இந்த நிலத்தட்டின் அனைத்து பிரிவுகளும் சமமாக உருவாக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. தட்டின் தடிப்புக் குறைந்த பகுதிகள் பெரிய நிலநடுக்கங்களின் அச்சுறுத்தலுக்குள்ளாகும் ஆபத்து அதிகம் உணடு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளது.

வான்கூவர் தீவு மற்றும் வொஷிங்டன் மாநிலத்தின் ஒலிம்பிக் தீபகற்பத்தின் கடற்கரையில் உள்ள பகுதி, மாறாக, ‘தெற்கே உள்ள பகுதிகளை விட குறிப்பிடத்தக்க வகையில் தட்டையானது மற்றும் மென்மையானது’ என்று கார்போட் விளக்கினார்.

“அந்த நிலைமைகள், மிகவும் அழிவுகரமான பூகம்பங்களை ஏற்படுத்தும் தொடர்புடைய நிலைமைகளைக் கொண்டுள்ளன.” - என்று கூறப்பட்டது.

இப்பகுதி, முழு காஸ்காடியா துணை மண்டலத்திலும் மிகப்பெரிய பூகம்பங்களுக்கு மிகப்பெரிய ஆற்றலைக் கொண்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்தனர்.

ஏனென்றால் தட்டுகள் இறுதியில் நழுவும்போது, அவை மற்ற இடங்களை விட ஒரே ஷாட்டில் அதிக தூரம் சரியக்கூடும் என்று காசிடி கூறினார்.

“சில பகுதிகள் சில நிமிடங்களில் 20 மீட்டர் சரிவைக் காணலாம்,” என்று அவர் கூறினார்.

இவ்வளவையும் கணித்த விஞ்ஞான ஆய்வுகள் அடுத்த மெகா நிலநடுக்கம் எப்போது வரும் என்று கூறவில்லை.

கடைசி மோசமான பூகம்பம் கடந்த 1700 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிகழ்ந்தது என வரலாற்றுப் பதிவுகள் தெரிவிக்கின்றன. மேலும் கடந்த 10,000 ஆண்டுகளில் 9.0 ரிக்டர் அளவு வரம்பில் இதுபோன்ற மோசமான 19 நிலநடுக்கங்களை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் என காசிடி கூறினார்.

இத்தகைய பாரிய பூகம்பங்கள், ஒவ்வொரு 500 வருடங்களுக்கும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் சான்றுகள் சில இடைவெளிகளை சுமார் 250 ஆண்டுகள் மற்றும் சில 850 வரைக் காட்டியுள்ளன.

ஆனால் அடுத்த நிலநடுக்கம் எப்போது வரும் என்று ஆராய்ச்சியால் கூற முடியாது என்றாலும், அது எங்கு தாக்கும், எங்கு விளைவுகள் மோசமாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்ள இது உதவும் என்று காசிடி கூறினார்.




# கனடாவில் பதின்ம வயதினருக்கு உண்ணுதல் கோளாறுச் சிக்கல்!

கனடாவில் பதின்ம வயதினருக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து குறித்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

உண்ணுதல் கோளாறுகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உண்ணுதல் கோளாறு: (eating disorders) என்பது ஒரு மனக்கோளாறு ஆகும். ஒரு தனிநபரின் உடல்நலம் மற்றும் மனநலத்திற்குக் கேடு விளைவிக்கத்தக்க குறைந்த அளவில் அல்லது மிதமிஞ்சிய அளவில் உணவு உட்கொள்ளும் அசாதாரண பழக்க வழக்கங்கள் உண்ணுதல் கோளாறு அல்லது உணவு உட்கொள்ளல் தொடர்பான நோய்கள் என்று வரையறுக்கப்படுகின்றன.

அடிப்படை மருத்துவ சேவைகளை வழங்கும் போது உண்ணுதல் கோளாறுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நோய் அறிகுறிகள் முன்கூட்டியே அடையாளம் காணப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வழமையான மருத்துவ பரிசோதனைகளைப் போன்றே ஏனைய மருத்துவ பரிசோதனைகளின் போதும் உண்ணுதல் கோளாறு குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உண்ணுதல் கோளாறு குறித்து முன்கூட்டியே கண்டறிவது மிகவும் அவசியமானது என பேராசிரியர் டொக்டர் டெபேரா காட்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

உண்ணுதல் கோளாறு காணப்படுவர்களின் உடல் எடையில் பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.





# தமிழ் கனேடியர்கள் இருவர் தெல்லிப்பளையில் கைது!

## சட்டத்தரணி ஒருவரைத் தாக்கினராம்

மல்லாகம் நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து தம்மை தாக்கினர் என சட்டத்தரணி ஒருவர் செய்த முறைப்பாட்டின் பேரில், இலங்கைத் தமிழ் கனேடியர்கள் இருவர் தெல்லிப்பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை பொலிஸார் செவ்வாய்க்கிழமை கைது செய்தனர். நீதிவான் முன் அவர்கள் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

சந்தேகநபர்களான தந்தையும் அவரது மகனும் அண்மையில் விடுமுறையில் திரும்பிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமாக நிலத்தை ஆக்கிரமித்தவர்கள் என்று கூறப்படும் ஒரு தரப்பினர், கனடாவைச் சேர்ந்த குடும்பத்தினர் தம்மை அச்சுறுத்தினர் எனக் குற்றம் சுமத்தி, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அன்றே இச்சம்பவம் நடந்துள்ளது.

